பக்கங்கள்: 08
காலைக்கதிர்
Kālaikkathir
மாலைப்பதிப்பு
சாயல் 02 வள்ளுவர் ஆண்டு 2052 ஐப்பசி 30 செவ்வாய்க்கிழமை 16.11.2021 கதிர் 239

## தரம் 6, 7, 8, 9 வகுப்புகள் திங்கள் முதல் ஆரம்பம்

தரம் 6, 7, 8, 9 வகுப்புகள் எதிர்வரும் 22 ஆம் திகதி திங்கட்கிழமை முதல் மீள ஆரம்பமாகவுள்ளன என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

கொரோனா வைரஸ் தொற்றுப் பரவல் காரணமாக பாடசாலைகள் மூடப்பட்டிருந்த நிலையில் கட்டம் கட்டமாக பாடசாலை ☞2

# இது ஆரம்பம் மட்டுமே; இனி அதிரடி தொடரும்

## கொழும்பில் கோட்டா அரசுக்கு எதிரான போராட்டத்தில் விண்ணதிரக் கோஷம்



**இது ஆரம்பம் மட்டுமே. மக்களின் வாழும் உரிமை உறுதிப்படுத்தப்படும் வரை போராடுவோம். உயிர்த் தியாகம் செய்வதற்கும் நாம் தயார்.**

**– இவ்வாறு எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ தலைமையிலான ஐக்கிய மக்கள் சக்தியின் நாடாளுமன்ற உறுப்பினர்கள் சூளுரைத்தனர்.**

**விவசாயம் அழிப்பு, பொருள்களின் விலையேற்றம், பொருளாதார** ☞2

## நகர சபைத் தலைவர் உட்பட ஐந்து பேருக்குக் கொரோனா

### சாவகச்சேரியில் எகிறும் தொற்றாளர்கள்

சாவகச்சேரி சுகாதார வைத்திய அதிகாரி பணிமனையில் மேற்கொள்ளப்பட்ட பரிசோதனையில் சாவகச்சேரி நகர சபைத்தலைவர் உட்பட ஐவருக்குக் கொரோனா வைரஸ் தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளது.

சாவகச்சேரி சுகாதார வைத்திய அதிகாரி பணிமனையில் இன்று 36 பேருக்கு மேற்கொள்ளப்பட்ட அன்டிஜன் பரிசோதனையில் குறித்த ஐவருக்கும் தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளது.

சாவகச்சேரி நகர சபை தலைவர் திருமதி மங்கயற்கரசி, சாவகச்சேரி யூனியன் வெதுப்பகத்திற்கு அருகாமையில் செயற்பட்டுவரும் நிறுவனம் ஒன்றில் பணியாற்றும் மூவர், சாவகச்சேரி சங்கத்தானையைச் சேர்ந்த நபர் என ஐவருக்குத் தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளது.

குறித்த நிறுவனத்தில் முதலில் ஐவருக்குத் தொற்று உறுதி செய்யப்பட்டிருந்த நிலை ☞2

## எரிபொருள் தாராளம்; முண்டியடிப்பு வேண்டாம்!

**(கலையமுதன், ந.லோகதயாளன்)**

யாழ்ப்பாணம்,நவ.16

அதிகளவு கொள்வனவு காரணமாக சில பெற்றோல் நிலையங்களில் செயற்கைத் தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளது. வதந்தியால்ஏற்பட்ட நிலைமை என்றே இதனை நாங்கள் கருதுகின்றோம். தேவையான எரிபொருள் ☞2



## கார்த்திகைத் தீபத் திருநாளன்று நாவலர் பெருமான் சிலை திறப்பு

(இ.கலையமுதன்)

கார்த்திகைத் தீபத் திருநாளான நாளைமறுதினம் காலை 10 மணிக்கு நாவலர் கலாசார மண்டபத்தின் நுழைவாயிலில் யாழ். மாநகர சபையின் உறுதுணையுடன் சைவ மகா சபையால் நிறுவப்பட்ட நாவலர் பெருமானின் திருவுருவச் சிலை திறந்து வைக்கப்படவுள்ளது.

இதையொட்டி நாவலர் கலாசார மண்டபத்தைத் திருத்திய மைக்கும் பணிகள் தற்போது நடைபெற்று வருகின்றன. ☞2




## அறுபது வயதுக்கு மேற்பட்டோருக்கு நாளை முதல் பூஸ்டர்

இலங்கையில் ஏற்கனவே இரண்டு கொரோனாத் தடுப்பூசிகளைப் பெற்றுக் ☞2

## அநுராதபுரத்தில் மாணவர் கொத்தணி; 100 இற்கும் மேற்பட்டோருக்கு தொற்று!

### ஆரம்பப் பிரிவினரே பாதிப்பு; ஆசிரியர்களுக்கும் கொரோனா



அநுராதபுரம் மாவட்டத்திலுள்ள நூற்றுக்கும் அதிகமான ஆரம்பப் பிரிவு மாணவர்களுக்குக் கொரோனா வைரஸ் தொற்று ஏற்பட்டுள்ளது என மாவட்ட தொற்று நோய் பிரிவின் விசேட வைத்தியர் ஆர்.எம்.எஸ்.பி.ரத்நாயக்க தெரிவித்தார்.

மாவட்டத்திலுள்ள 55 இற்கும் அதிகமான பாடசாலைகளிலுள்ள ஆரம்பப் பிரிவு மாணவர்களுக்கே இவ்வாறு தொற்று உறுதிப்படுத்தப்பட்டுள்ளது எனத் தொற்று நோய்ப் பிரிவின் தகவல்கள் மூலம் தெரியவந்துள்ளது.

அடையாளம் காணப்பட்ட ☞2

## ஒரு வயது குழந்தையை பலியெடுத்த கொரோனா

கொரோனா வைரஸ் தொற்றால் ஒரு வயது ஆண் குழந்தை பரிதாபகரமாக உயிரிழந்துள்ளது.

குறித்த குழந்தை தொற்றுடன் தியத்தலாவை வைத்தியசாலையில் சேர்க்கப்பட்ட நிலையில் சிகிச்சை பயனின்றி உயிரிழந்துள்ளது.

குழந்தைக்கு மேற்கொண்ட 'ரெபிட் அன்டிஜன்' பரிசோதனையின் ☞2

காலைக்கதிர் Kalaikkathir மாலைப்பதிப்பு



## தரம் 6,7, ....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

கள் மீள ஆரம்பிக்கப்பட்டு கல்விச் செயற்பாடுகள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன.

அந்தவகையில் எதிர்வரும் திங்கட்கிழமை முதல் தரம் 6, 7, 8, 9 ஆகிய வகுப்புகளுக்கான கற்றல் செயற்பாடுகள் மீள ஆரம்பிக்கப்படவுள்ளன என்று அரசு இன்று அறிவித்துள்ளது.

## இது ஆரம்பம் ....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

நெருக்கடி ஆகியவற்றுக்கு எதிர்ப்புத் தெரிவித்தும், மக்களுக்கு நிவாரணம் வழங்குமாறு வலியுறுத்தியும் ஐக்கிய மக்கள் சக்தியால் ஏற்பாடு செய்யப்பட்டுள்ள மாபெரும் அரச எதிர்ப்புப் போராட்டம் கொழும்பில் இன்று மாலை முன்னெடுக்கப்பட்டு வருகின்றது.

பொலிஸ் உள்ளிட்ட அரச படைகளின் பல்வேறு தடைகளுக்கு மத்தியிலும் பெருந்திரளான மக்கள் கொழும்பு நோக்கி வந்து நிவாரணம் வேண்டும், வாழ்க்கைச்சுமை குறைக்கப்பட வேண்டும், நாட்டு வளங்கள் பாதுகாக்கப்பட வேண்டும், உரப்பிரச்சினைக்குத் தீர்வு காணப்பட வேண்டும் எனக் கோஷங்களை எழுப்பி வருகின்றனர்.

எதிர்க்கட்சித் தலைவர் அலுவலகத்துக்கு முன்னால் பேரணி ஆரம்பமாகி, ஹைட் பார்க் மைதானம் வரை சென்று அங்கு கவனவீர்ப்புப் போராட்டத்துடனான கூட்டம் நடைபெறுகின்றது.

இந்தப் போராட்டத்தால் கொழும்பிலும், அதனைச் சூழவுள்ள பகுதிகளிலும் பாதுகாப்பு பலப்படுத்தப்பட்டுள்ளது.

## நகர சபைத் ....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

யில் பின்னர் மேலும் இருவருக்குத் தொற்று உறுதி செய்யப்பட்டிருந்தது.

இந்நிலையில், இன்று மேலும் மூவருக்கு தொற்று உறுதி செய்யப்பட்டதை அடுத்து அங்கு தொற்று உறுதி செய்யப்பட்டவர்களது எண்ணிக்கை 10 ஆக உயர்ந்துள்ளது.

## அறுபது வயதுக்கு ....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

கொண்ட 60 வயதுக்கு மேற்பட்ட பொது மக்களுக்கு மூன்றாவதாக பைஸர் 'பூஸ்டர்' தடுப்பூசி வழங்கும் நடவடிக்கை நாளை முதல் ஆரம்பமாகின்றது.

முதல் கட்டமாக மேல், தென் மாகாணங்கள், அநுராதபுரம் மற்றும் அம்பாறை மாவட்டங்களில் நாளை முதல் மூன்றாவது தடுப்பூசி வழங்கும் நடவடிக்கை ஆரம்பமாகும். தொடர்ந்து ஏனைய பகுதிகளுக்கும் இது விரிவுபடுத்தப்படும்.

ஏற்கனவே இரண்டு தடுப்பூசிகளையும் போட்டு 3 மாதங்கள் முடிந்தவர்கள் 3 ஆவது பைஸர் தடுப்பூசியைப் பெறத் தகுதியுடையவர்களாவர்.

முதல் கட்டமாக, சுகாதாரத் துறையினர், முப்படையினர், பொலிஸார், சுற்றுலாத்துறையில் ஈடுபட்டுள்ளவர்கள் மற்றும் முன்களப் பணியாளர்களுக்கு மூன்றாவது பூஸ்டர் தடுப்பூசி போடும் நடவடிக்கை கடந்த முதலாம் திகதி ஆரம்பிக்கப்பட்டது. இதுவரை ஒரு லட்சத்துக்கும் மேற்பட்டவர்களுக்கு பூஸ்டர் தடுப்பூசிகள் வழங்கப்பட்டுள்ளன.

இந்நிலையில், 60 வயதுக்கு மேற்பட்ட சகலருக்கும் நாளை முதல் பூஸ்டர் தடுப்பூசி வழங்கும் நடவடிக்கை ஆரம்பமாகின்றது. அதன்பின்னர் 20 வயதுக்கு மேற்பட்ட அனைவருக்கு பூஸ்டர் தடு வழங்கப்படும். இதற்காக ஒரு கோடி 45 லட்சம் பைஸர் தடுப்பூசிகளை வாங்க அரசு திட்டமிட்டுள்ளது.

## எரிபொருள் ....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

யாழ்ப்பாணத்திலும் கொழும்பிலும் கையிருப்பில் உள்ளது - என்று யாழ் மாவட்ட அரசாங்க அதிபர் கணபதிப்பிள்ளை மகேசன் தெரிவித்தார்.

இன்று மதியம் யாழ் மாவட்ட செயலகத்தில் இடம்பெற்ற ஊடக சந்திப்பிலேயே அவர் இதனைத் தெரிவித்தார். அவர் மேலும் கூறியவை வருமாறு:-

அவர் மேலும் தெரிவிக்கையில்,

யாழ் மாவட்டத்தில் போதியளவு எரிபொருள் கையிருப்பு உள்ளது. மாவட்டத்துக்கான எரிபொருள் விநியோகமும் சீராக இடம் பெறுகிறது. அதனால் பொதுமக்கள் நீண்ட வரிசையில் காத்திருந்து எரிபொருளை நிரப்ப வேண்டிய அவசியமில்லை.

-வடமாகாண பெற்றோலியக் கூட்டுத்தாபனத்தின் முகாமையாளருடன் நாம் தொடர்பு கொண்டு கேட்டபொழுது நேற்றைய நிலையில் காங்கேசன்துறை பெற்றோலிய கூட்டுத்தாபன களஞ்சியசாலையில் 26 லட்சம் லீற்றர் டீசலும், 155,000 லீற்றர் 92 ஒக்ரைன் பெற்றோலும், 165,000 லீற்றர் மண்ணெண்ணெயும் இருப்பதாகத் தெரிவிக்கப்பட்டது. 66,000 லீற்றர் 92 ஒக்ரைன் பெற்றோல் யாழ்ப்பாண மாவட்டத்திற்கு கொண்டு வரப்படுகிறது.

பெற்றோல் விநியோகத்தை தங்கு தடையின்றி மேற்கொள்ள பெற்றோலியக் கூட்டுத்தாபனம் நடவடிக்கை எடுத்துள்ளது. ஆகவே பொதுமக்கள் முண்டியடித்து தட்டுப்பாடு வருவதாகக் கருதி அதிகமாக கொள்வனவு செய்து களஞ்சியப் படுத்தாமல் தேவையான அளவை மாத்திரம் கொள்வனவு செய்யுங்கள்.

அதிகளவு கொள்வனவு காரணமாக சில பெற்றோல் நிலையங்களில் செயற்கை தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளது. வதந்தியால் ஏற்பட்ட நிலைமை என்றே இதனை நாங்கள் கருதுகின்றோம். தேவையான எரிபொருள் கொழும்பில் கையிருப்பில் உள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

ஆகவே யாழ் மாவட்ட மக்கள் தயவுசெய்து கொள்வனவை அதிகரித்த அளவில் செய்ய வேண்டாம். இதனால் கறுப்பு சந்தையிலே விலைகள் அதிகரித்து விற்பனை செய்யப்படுவதாகவும் நமக்கு முறைப்பாடுகள் கிடைத்துள்ளன. அவ்வாறு செய்ய வேண்டாமென விநயமாகக் கேட்டுக் கொள்கின்றோம். பாவனையாளர் பாதுகாப்பு அதிகார சபை உத்தியோகத்தர்களுக்கு இது தொடர்பில் அறிவுறுத்தல் வழங்கப்பட்டுள்ளது.

மேலும் இவ்வாறான காரியங்கள் தொடருமாக இருந்தால் பங்கீட்டு அடிப்படையில் விநியோகம் செய்ய வேண்டிய நிலைமை ஏற்படலாம்.

அரசாங்கமும் தட்டுப்பாடு ஏற்படாது என கூறி வருகின்றது. பொதுமக்கள் பொறுப்புடன் நடந்து கொள்ள வேண்டும். - என்றார்.

## ஒரு வயது ....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

போதே தொற்றுக்கு உள்ளாகியமை தெரியவந்துள்ளது.

உயிரிழந்த குழந்தையின் சடலம் தகனம் செய்யப்படும் என்று தியத்தலாவை பிரதேச பொதுச் சுகாதாரப் பரிசோதகர் ஜீவந்த பிரசன்ன தெரிவித்தார்.

இதேவேளை, இந்தப் பிரதேசத்தின் கொங்கம ஆரம்பப் பாடசாலை அதிபருக்கும், மாணவர்கள் இருவருக்கும் கொரோனாத் தொற்று உறுதியாகியுள்ளது எனவும், அதனால் அப்பாடசாலை நேற்றுத் தொடக்கம் மூடப்பட்டுள்ளது எனவும் பொதுச் சுகாதாரப் பரிசோதகர் மேலும் கூறினார்.

பாடசாலை மூடப்பட்டிருப்பதை பண்டாரவளை கல்வி வலயமும் உறுதி செய்துள்ளது.

அதிபருடனும், மாணவர்கள் இருவருடனும் தொடர்புகளைப் பேணியவர்களை கண்டறியும் நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்றன.

## கார்த்திகைத் தீபத்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

நாவலர் கலாசார மண்டபத்தின் பராமரிப்பு தொடர்பில் சர்ச்சைகள் வெளிவந்த நிலையில், அங்கு நாவலரின் சிலை பிரதிஷ்டை செய்யப்படுகின்றமை குறிப்பிடத்தக்கது.

## அநுராதபுரத்தில் ...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

மாணவர்கள் கல்வி பயின்ற வகுப்புக்களைச் சேர்ந்த 250 இற்கும் அதிகமான மாணவர்கள் தற்சமயம் அவர்களின் வீடுகளில் சுய தனிமைப்படுத்தலுக்கு உட்படுத்தப்பட்டுள்ளமையுடன் இருபதுக்கும் அதிகமான ஆசிரியர்களுக்கும் தொற்று ஏற்பட்டுள்ளமை அன்டிஜன் பரிசோதனை முடிவுகளில் இருந்து தெரியவந்துள்ளது.

இதேவேளை, அநுராதபுரம் மாவட்டத்தில் நாளாந்தம் கணிசமான அளவு கொரோனா நோயாளர்கள் அடையாளம் காணப்படுகின்றனர் எனவும் சுகாதாரப் பிரிவினர் தெரிவித்துள்ளனர்.

அநுராபுரம் மாவட்டத்தில் கடந்த இரு வாரங்களில் மாத்திரம் 2 ஆயிரத்துக்கும் அதிகளவான கொரோனா நோயாளர்கள் அடையாளம் காணப்பட்டுள்ளனர் என்று மாவட்ட தொற்று நோய் தொடர்பான வைத்திய நிபுணர் ரத்நாயக்க தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

இவர்களில் அதிகளவில் ஆரம்பப் பாடசாலை மாணவர்கள் மற்றும் ஆசிரியர்களே உள்ளடங்குகின்றனர். ஒக்ரோபர் மாதத்தில் மாத்திரம் 2 ஆயிரத்து 800 பேருக்கு கொரோனாத் தொற்று உறுதிப்படுத்தப்பட்டுள்ளது. இருந்த போதிலும் கடந்த இரு வாரங்களில் 2 ஆயிரத்து 650 பேருக்கு தொற்று உறுதிப்படுத்தப்பட்டுள்ளது.

நாளாந்தம் 500 பேருக்கு அன்டிஜன் பரிசோதனை மேற்கொள்ளப்படுகின்றது. அவர்களில் 250 முதல் 300 வரையானவர்களுக்கு தொற்று உறுதிப்படுத்தப்படுகின்றது.

இதுவரையில் 28 ஆயிரத்து 500 இற்கும் அதிகமான தொற்றாளர்கள் அடையாளம் காணப்பட்டுள்ளமையுடன் 341 கொரோனா மரணங்களும் மாவட்டத்தில் பதிவாகியுள்ளன - என்றார்.

## ஜனாதிபதி ஊடக விருது வழங்கலுக்கு அங்கீகாரம்

உள்ளூர் ஊடகவியலாளர்களை ஊக்குவிக்கும் வகையில், உத்தேச ஜனாதிபதி ஊடக விருது வழங்கும் விழாவை தெரிவு செய்யப்பட்ட ஆறு பிரிவுகளின் கீழ் நடத்துவதற்கு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கப்பட்டுள்ளது.

இதன் கீழ், தொலைக்காட்சி, வானொலி, அச்சு ஊடகம், இணையத்தளங்கள், பாடசாலை ஊடகங்கள் மற்றும் ஊடக ஆராய்ச்சி ஆகிய ஆறு துறைகளை உள்ளடக்கியதாக சிங்களம், தமிழ் மற்றும் ஆங்கில மொழிகளில் 2021 ஆம் ஆண்டு உருவாக்கப்பட்ட படைப்புகளுக்காக விருதுகள் வழங்கப்படவுள்ளன.

எவ்வாறாயினும், ஜனாதிபதி ஊடக விருது வழங்கும் திகதி அல்லது விண்ணப்பங்களைக் கோருவது தொடர்பில் இறுதித் தீர்மானம் எடுக்கப்படவில்லை.

விளம்பரத் தொடர்புகளுக்கு
தொலைபேசி இலக்கம்-
076 443 8622



# நமது பார்வை

உண்மை - நேர்மை - பக்கம் சாராமை

ஆசிரியபீடம்: 30, கல்லூரி வீதி, யாழ்ப்பாணம் மின்னஞ்சல் - kalaikkathirnews@gmail.com
தொலைபேசி - 021 222 3000 இணையம் - onlinekathir.com

## இனி எதேச்சாதிகாரம்தான்!

இலங்கையின் நிறைவேற்று அதிகார ஜனாதிபதியாக கோட்டாபய ராஜபக்ஷ பதவியேற்று நாளை மறுதினம் இரண்டு ஆண்டுகள் பூர்த்தியாகின்றன.

2019 நவம்பர் 17ஆம் திகதி நடைபெற்ற ஜனாதிபதித் தேர்தலில் வெற்றி பெற்று, அடுத்த நாள் நவம்பர் 18ஆம் திகதி அவர் ஜனாதிபதியாக பதவியேற்றார்.

அந்தத் தேர்தலில் 69 லட்சம் வாக்குகளை பெற்ற அவர், 13 லட்சத்து 60 ஆயிரம் வாக்குகளை மேலதிகமாக பெற்று, தென்னிலங்கை பௌத்த, சிங்கள மக்களின் பேராதரவு மற்றும் பேரபிமானத்தோடு ஆட்சிக்கட்டில் ஏறினார்.

அடுத்து வந்த ஒகஸ்டில் – சரியாக 15 மாதங்களுக்கு முன்னர் – நடைபெற்ற பொதுத்தேர்தலில் அவரது அரசுக்கு மகத்தான வெற்றியை தென்னிலங்கை பௌத்த, சிங்கள மக்கள் அளித்தனர்.

நாடாளுமன்றத்தில் கிட்டிய மூன்றில் இரண்டு பங்கு வெற்றியை வைத்துக்கொண்டு, அவசர அவசரமாக அரசமைப்புக்கான 20 ஆவது திருத்தத்தை கொண்டு வந்து அவர் நிறைவேற்றினார். அதன்மூலம் அதுவரை வெட்டப்பட்டிருந்த நிறைவேற்று அதிகார ஜனாதிபதியின் அதிகாரங்களை அவர் மீண்டும் சுவீகரித்து, தம்மை அதிகார ரீதியாக மேலும் வளப்படுத்தி – வலுப்படுத்தி – கொண்டார்.

இவ்வாறு தம்மை பலப்படுத்திக் கொண்ட அவர், அதன் மூலம் மக்கள் செல்வாக்கையும் அபிமானத்தையும் பெற்ற பெருந் தலைவராக மேல் எழவில்லை.

மாறாக, மிகக் குறுகிய காலத்தில் மக்களால் தூற்றப்படும் ஆட்சித் தலைவர் என்ற இழிநிலைக்கு அவர் ஆளானார். இதுதான் யதார்த்தத்தில் இப்போது நடந்தேறியிருக்கின்றது.

இன்று தலைநகர் கொழும்பிலும் பிற இடங்களிலும் பிரதான எதிர்க்கட்சியான ஐக்கிய மக்கள் சக்தியின் ஏற்பாட்டில் இடம்பெற்ற பிரம்மாண்டமான மக்கள் எழுச்சிப் போராட்டங்கள் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவின் ஆட்சியையும் நிர்வாகத்தையும் அரசையும் உரைத்துப் பார்க்க நல்ல உரைகல் – அளவுகோல் – என்று கூறலாம்.

அரசுக்கு எதிரான மக்கள் எழுச்சியை அடக்குவதற்காக சுகாதார விதிமுறைகளைக் கையிலெடுத்து அவற்றின் பேரில் பொலிஸாரைக் களத்தில் இறக்கி, வீதிகளுக்கு குறுக்கே தடைகளை ஏற்படுத்தி, கொழும்பு நகருக்குள் நுழையும் பஸ்களை தடுத்து, அடக்குமுறை நடவடிக்கையை வெளிப்படையாக கட்டவிழ்த்து விட வேண்டிய கட்டாயத்தில் கோட்டா அரசு இன்று இருக்கின்றது. இரண்டு வருடங்களுக்கு முன்னர் பெரும் மக்கள் எழுச்சியுடன் வெற்றியீட்டிய ஜனாதிபதியும், பதினைந்து மாதங்களுக்கு முன்னர் மூன்றில் இரண்டு பங்கு நாடாளுமன்ற ஆசனங்களை வென்று உறுதியான ஆட்சி அமைத்த அரசும், அதற்குள் எதிரணி முன்னெடுத்த மக்கள் எழுச்சி ஆர்ப்பாட்டங்களை அடக்குவதற்கு, சுகாதாரத்துறையின் ஒழுங்குக் கட்டுப்பாடு விதிமுறைகள் வர்த்தமானியில் அறிவித்துவிட்டு, அவற்றை எடுத்துக்கொண்டு நீதிமன்றங்களுக்கு ஓடியபோதே உண்மை நிலை அம்பலமாகி வெட்ட வெளிச்சமாகி விட்டது.

பேரபிமானம், பேராதரவு, பெரும் செல்வாக்குடன், பெருத்த ஆரவார எடுப்போடு, அதிகாரத்துக்கு வந்த தலைவரினதும், அவரது அரசினதும் முகத்திரை கிழிந்து, சாயம் வெளுத்து, உண்மை முகம் அம்பலமாகிவிட்டது என்பதையே இன்றைய மக்கள் எழுச்சி வெளிப்பாடுகள் எடுத்துக் காட்டுகின்றன.

'கொவிட்' தொற்றுப் பரவலைத் தடுப்பதற்கு என்ற பெயரில், இறுதிநேரத்தில் அரசு கொண்டுவந்த அடக்குமுறை விதிமுறைகளையும் மீறி, பல இடங்களில் நீதிமன்றத் தடைகளையும் தாண்டியும் கூட, இன்று மக்கள் பல்லாயிரக்கணக்கில் திரண்டமை இந்த அதிகார பீடத்தின் சரிவு காலம் தொடங்கிவிட்டது என்பதன் குறியீடுதான். முன்னமே எதிர்பார்க்கப்பட்டமை போன்று இனிமேல் கோட்டா அரசின் எதேச்சாதிகாரம் வெளிப்படையாக கட்டவிழும். அதிகாரத் தரப்பின் மக்கள் செல்வாக்கு சரியும் போது அங்கு வெளிப்படுவது அதுவாகத் தான் இருக்கும்.



## எதிர்க்கட்சியின் கேள்விக்கு மௌனம் காத்த செஹான்

### பதிலளிக்கவேண்டிய பஸில் சபையில் இல்லை

நிதி அமைச்சர் இல்லாவிட்டாலும் கேள்விகளுக்கு பதிலளிப்போம் என குறிப்பிட்ட இராஜாங்க அமைச்சர் செஹான் சேமசிங்க எதிர்க்கட்சியினர்எழுப்பியசிலகேள்விகளுக்கு மௌனம் காத்தார்.

நாடாளுமன்றத்தில் நேற்று (திங்கட்கிழமை) 2022 ஆம் ஆண்டுக்கான வரவு – செலவுத் திட்ட இரண்டாம் வாசிப்பு மீதான விவாதத்தில் கேள்விகளுக்கு பதில் வழங்குவதற்கு நிதி அமைச்சர் சபையில் இல்லை என எதிர்க்கட்சி விமர்சித்தது.

ஆகவே அவரை சபைக்கு வரவழைக்க நடவடிக்கை எடுக்க வேண்டும் என்றும் சம்பிரதாய முறைப்படி நிதி அமைச்சர் சபையில் இருக்க வேண்டும் என்றும் லக்ஷ்மன் கிரியெல்ல கேட்டுக்கொண்டார்.

அத்தோடு முன்னாள் பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவும் குறித்த கோரிக்கையை முன்வைத்திருந்த நிலையில், நிதி அமைச்சு சார்ந்து கேள்விகளுக்கு பதில் தெரிவிக்க அமைச்சர்கள் இருக்கின்றனர் என இராஜாங்க அமைச்சர் செஹான் சேமசிங்க கூறினார்.

இதனை அடுத்து நாட்டில் காணப்படும் டொலர் பற்றாக்குறை மற்றும் 60 கோடி அமெரிக்க டொலர் கடன்களை செலுத்துவது எவ்வாறு என எதிர்க்கட்சி உறுப்பினர் லக்ஷ்மன் கிரியெல்ல கேள்வியை எழுப்பியிருந்தார்.

இருப்பினும் குறித்த கேள்விகளுக்கு பதில்வழங்க முடியாமல் இராஜாங்க அமைச்சர் செஹான் சேமசிங்க மௌனம் காத்தமை குறிப்பிடத்தக்கது.

## சவேந்திர சில்வாவிற்கு தடைவிதிக்க வேண்டும்

### பிரிட்டன் அரசிடம் அந்த நாட்டு எம்.பி. கோரிக்கை

இராணுவத் தளபதி சவேந்திர சில்வாவிற்கு எதிராகத் தடை விதிப்பதற்கு ஆதரவளிக்குமாறு பிரிட்டன் அரசாங்கத்திடம் அந்நாட்டு நாடாளுமன்ற உறுப்பினர் சாரா ஜோன்ஸ் கோரிக்கை விடுத்துள்ளார்.



தன்னுடைய தொகுதியில் வசிக்கும் தமிழ் சமூகத்தினர் மத்தியில் இலங்கையில் இடம்பெற்ற போரின் வடுக்கள் இன்னமும் இருப்பதை உணரமுடிவதாகவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

அதுமாத்திரமன்றி உலகில் பல்வேறு பகுதிகளிலும் வாழும் இலங்கைத் தமிழர்கள் தொடர்பாக நீதியும் பொறுப்புக்கூறலும் உறுதி செய்யப்படவேண்டும் என்றும் அவர் வலியுறுத்தியுள்ளார்.

இந்நிலையில் இராணுவத் தளபதி சவேந்திர சில்வாவைத் தடைசெய்யுங்கள் என்ற வாசகத்துடனான பதாகையுடன் சாரா ஜோன்ஸ் அவரது உத்தியோகபூர்வ டுவிட்டர் பக்கத்தில் பதிவிட்டுள்ளார்.

மேலும் இந்த விடயத்தை இலங்கை மட்டுமன்றி உலகம் முழுவதிலும் வாழும் தமிழர்களுக்காக நாம் அதனைத் தொடர்ந்து வலியுறுத்தவேண்டும் என்று சாரா ஜோன்ஸ் குறிப்பிட்டுள்ளார்.

## தேவாலயம் மற்றும் தபாலகம் என்பன லிந்துலையில் உடைக்கப்பட்டு சேதம்

### பெண் ஒருவர் கைது

லிந்துலை பொலிஸ் பிரிவிற்குட்பட்ட நாகசேனை நகரில் நேற்று அதிகாலை பிரதேசத்தில் உள்ள தபால் நிலையம் மற்றும் கிறிஸ்தவ ஆலயம் ஆகியன உடைக்கப்பட்டு சேதப்படுத்தப்பட்ட விவகாரத்தில் பெண் ஒருவர் லிந்துலை பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளார் என லிந்துலை பொலிஸார் தெரிவிக்கின்றனர்.

நாகசேனை நகரத்தில் இயங்கும் தபால் நிலையம் நேற்று (திங்கட்கிழமை) அதிகாலை உடைக்கப்பட்டு பொருள்களும் சேதமாக்கப்பட்டுள்ளன.

இதேவேளை தபாலகத்திற்கு முன்பாக உள்ள இருதய ஆண்டவர் கிறிஸ்தவ ஆலயத்தின் முன்பகுதியில் காணப்பட்ட கிறிஸ்தவ சுரூபமும் உடைக்கப்பட்டுள்ளது. அத்தோடு ஆலயத்தின் முன்பகுதியில் இருந்த ஏனைய பொருள்களும் சேதமாக்கப்பட்டுள்ளன.

சம்பவம் தொடர்பில் பிரதேச மக்கள் லிந்துலை பொலிஸாருக்கு தகவல் வழங்கியதையடுத்து, சம்பவ இடத்துக்கு விரைந்த பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டபின், குறித்த தபால் நிலையத்தில் உள்ள சமயலறைக்குச் சென்ற பொழுது, அங்கிருந்த 38 வயது மதிக்கத்தக்க பெண் ஒருவரையும் பொலிஸார் கைது செய்துள்ளனர். சந்தேகத்தின் பேரில் கைது செய்யப்பட்ட பெண்ணிடம் விசாரணைகளை மேற்கொள்ளும் லிந்துலை பொலிஸார், இந்தச் சம்பவம் தொடர்பாக மேலதிக விசாரணைகளையும் மேற்கொண்டு வருகின்றனர்.



# ஒருமாத இடைவெளிக்கு பிறகு தென்பட்ட வடகொரிய தலைவர்!

வட கொரியத் தலைவர் கிம் ஜோங் உன், சீனாவுடனான எல்லைக்கு அருகே முன்னெடுக்கப்பட்டு வரும் ஒரு பெரிய வளர்ச்சித் திட்டத்தை ஆய்வு செய்தார் என வடக்கின் அதிகாரப்பூர்வ கொரிய மத்திய செய்தி நிறுவனம் செய்தி வெளியிட்டுள்ளது.

இதன்மூலம் ஒரு மாத கால இடைவெளிக்கு வடகொரியத் தலைவர் கிம் ஜோங் உன், பொது பார்வையில் தோன்றினார்.

இது சர்வதேச தனிமை மற்றும் அழுத்தத்தை எதிர்கொண்டு செழிப்பை அடைய தனது நாட்டின் இரும்பு விருப்பத்தை எடுத்துக்காட்டுகிறது கிம் கூறினார். மேலும், கட்டுமான முன்னேற்றம் குறித்து திருப்தி தெரிவித்தார் எனவும் ஊடகம் செய்தி வெளியிட்டுள்ளது. அத்துடன் கிம்மின் குடும்பத்தினரால் போற்றப்படும் புனித மலையையும் பார்வையிட்டார் என, அரச ஊடகம் படத்துடன் செய்தி வெளியிட்டுள்ளது. கிம்மின் குடும்பத்தினால் போற்றப்படும் புனித மலையான மவுண்ட் பெக்டுவுக்கு அருகில் இந்த நகரம் உள்ளது.

மேலும், இது நாட்டின் புரட்சியின் ஆன்மீக மையமாக அதிகாரப்பூர்வ கதைகளால் விபரிக்கப்படுகின்றன.

வடகொரியாவின் வடக்கு அல்பைன் நகரமான சாம்ஜியோன், புதிய அடுக்குமாடி குடியிருப்புகள், ஹோட்டல்கள், ஸ்கை ரிசார்ட் மற்றும் வணிக, கலாச்சார மற்றும் மருத்துவ வசதிகளுடன் அமைக்கப்படுகிறது. இது 'சோசலிச உட்டோபியா' என்று அழைக்கப்படும் ஒரு பெரிய பொருளாதார நகரமாக மாற்றப்படுகிறது.

சர்வதேச தடைகள் மற்றும் கொரோனா வைரஸ் தொற்றுநோயால் ஏற்பட்ட தாமதங்களுக்குப் பிறகு, இந்த ஆண்டு இறுதிக்குள் முடிக்கப்படவுள்ள மூன்றாவது மற்றும் கடைசி கட்ட கட்டுமானத்தை ஆய்வு செய்வதற்காக கிம் இங்கு பயணம் மேற்கொண்டார் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

# எரிவாயுக் குழாய்களைத் தடுத்தால் பெலாரஸ் ஒப்பந்தத்தை மீறும் செயல்

## புடின் மறைமுகமாக எச்சரிக்கை!



குடியேறிகள் விவகாரத்தில் பெரும் பதற்றம் நிலவிவரும் நிலையில், பெலாரஸ் மீது தடைகள் விதிக்கப்பட்டால், ஐரோப்பிய ஒன்றியத்துக்குச் செல்லும் எரிவாயு குழாய்களை தடுப்போம் என அந்நாட்டின் ஜனாதிபதி லுகஷென்கொ எச்சரித்ததற்கு ரஷ்யா ஜனாதிபதி விளாடிமீர் புடின் மறைமுகமாக கண்டித்துள்ளார்.

இதுகுறித்து புடின் கூறுகையில், 'ஐரோப்பிய ஒன்றியத்துக்குச் செல்லும் எரிவாயு குழாய்களை பெலாரஸ் தடுத்தால் அது ஒப்பந்தத்தை மீறியதாகப் பொருள்.

நான் லூகஷென்கோ உடன் இரு முறை பேசினேன் எனவும், எரிவாயு விநியோகத்தை நிறுத்துவது தொடர்பாக எதையும் அவர் குறிப்பிடவில்லை.

எரிவாயு குழாய்கள் பெலாரஸ் நாட்டின் வழியாகச் செல்வதால், அந்நாட்டின் ஜனாதிபதி என்கிற முறையில் எரிவாயு விநியோகத்தை நிறுத்துமாறு உத்தரவிடலாம்.

ஆனால், அது எரிவாயு டிரான்சிட் ஒப்பந்தத்தை மீறுவதாக இருக்கும். அப்படி எதுவும் நடக்காது என நான் நம்புகிறேன்' என கூறினார்.

ஐரோப்பிய ஒன்றியத்தில் இடம்பெறாத பெலராஸ், ரஷ்யாவுடன் மிக நெருங்கி நட்புறவை பேணி வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

ஐரோப்பிய ஒன்றியம் மற்றும் நேட்டோ உறுப்பு நாடுகளான போலந்து, லிதுவேனியா, லாட்வியா ஆகிய நாடுகளுக்கும் பெலாரஸிலிருந்து சட்டவிரோதமாக வர முயலும் அகதிகளின் எண்ணிக்கை அண்மைக்காலமாக அதிகரித்து வருகிறது.

இந்த நிலையில், உரிய ஆவணங்களின்றி போலந்துக்குள் நுழைவதற்காக அந்த நாட்டு எல்லைப் பகுதியில் ஆயிரக்கணக்கான வெளிநாட்டு அகதிகள் முகாமிட்டுள்ளனர். பெரும்பாலும் மேற்கு ஆசிய நாடுகளிலிருந்தும் பிற ஆசிய நாடுகளிலிருந்தும் வந்துள்ள அந்த அகதிகள், பெண்கள் குழந்தைகளுடன் கடும் குளிரில் ஆபத்தான நிலையில் அங்கு தங்கியுள்ளனர்.

போலந்துக்கள் சட்டவிரோதமாக நுழைய அகதிகளை பெலாரஸ் ஜனாதிபதி அலெக்ஸாண்டர் லுகஷென்கோ தூண்டி வருகிறார் என ஐரோப்பிய ஒன்றியம், நேட்டோ அமைப்புகள் குற்றம் சாட்டி வருகின்றன. எனினும், இந்தக் குற்றச்சாட்டை பெலாரஸ் மறுத்துள்ளது.



# 2019 சிரியாவில் வான்வழித் தாக்குதல் சட்டபூர்வமானது என்கிறது அமெரிக்கா

சிரியாவில் கடந்த 2019ஆம் ஆண்டு மேற்கொள்ளப்பட்ட வான்வழித் தாக்குதல் சட்டபூர்வமானதுதான் என அமெரிக்க இராணுவம் நியாயப்படுத்தியுள்ளது.

2019ஆம் ஆண்டு மார்ச் 18ஆம் திகதியன்று கிழக்கு சிரியாவில் உள்ள பாகுஸ் நகரில் வான்வழித் தாக்குதல்கள் நடந்தன. இந்த வான்வழித் தாக்குதலில் இஸ்லாமிய அரசாங்கம் என தங்களை அழைத்துக் கொள்ளும் ஐ.எஸ். குழு போராளிகள் மீதான தாக்குதலில் 80 பேர் கொல்லப்பட்டனர்.

உயிரிழந்தவர்களில் 16பேர் ஆயுத மேந்தியவர்கள் என்றும், நான்கு பேர் பொதுமக்கள் என்றும் அமெரிக்கா அடையாளம் கண்டது.

60பேர் யார் பொதுமக்களா, ஆயுத மேந்திய வீரர்களா என வகைப்படுத்த முடியவில்லை. உயிரிழந்தவர்களில் பலரும் பொதுமக்களாக இருக்க அதிக வாய்ப்புள்ளது எனக் கூறப்பட்டது.

இந்த வான்வழித் தாக்குதல் குறித்து ஒரு தனி விசாரணை நடத்தப்படவில்லை. நியூயோர்க் 'டைம்ஸ்' பத்திரிகையில் வெளியான ஒரு செய்தியில் அமெரிக்க இராணுவம் இந்த தாக்குதலை மூடிமறைப்பதாக குற்றம் சாட்டியுள்ளது.

# 5 - 11 வயது சிறுவர்களுக்கு இஸ்ரேலில் தடுப்பூசி வழங்கல்



ஐந்து முதல் 11 வயது வரையிலான சிறுவர்கள் கொவிட்-19 தொற்றுக்கு எதிரான தடுப்பூசியைப் பெற தகுதியுடையவர்கள் என்றும் தடுப்பூசி செலுத்துவதற்கான ஆரம்ப திகதி இன்னும் சில நாள்களில் பகிரங்கப்படுத்தப்படும் என்றும் இஸ்ரேல் தெரிவித்துள்ளது.

சுகாதார அமைச்சகத்தால் அறிவிக்கப்பட்ட முடிவு, கடந்த வாரம் தடுப்பூசிகள் குறித்த அதன் நிபுணர் குழுவின் ஒப்புதலைத் தொடர்ந்து, அமெரிக்க உணவு மற்றும் மருந்து நிர்வாகம் பைஸர் மற்றும் பயோன்டெக் தடுப்பூசிகளை வயதுக்குட்பட்டவர்களுக்கு அவசரகாலமாகப் பயன்படுத்த அனுமதித்தது.

12 வயது மற்றும் அதற்கு மேற்பட்டவர்களுக்கு கொடுக்கப்பட்ட அசல் ஷாட் 30 மைக்ரோகிராம் ஆகும். ஆனால் ஐந்து முதல் 11 வயது வரையிலான சிறுவர்களுக்கு 10 மைக்ரோகிராம் அளவு பரிந்துரைக்கப்பட்டுள்ளது.

ஐந்து முதல் 11 வயது வரையிலான சிறுவர்களின் மருத்துவ பரிசோதனையில் கொரோனா வைரஸுக்கு எதிரான தடுப்பூசி 90.7 சதவீதம் செயல்திறனைக் காட்டியதாக பைஸர் மற்றும் பயோஎன்டெக் கூறியுள்ளன.

ஒரு அறிக்கையில், ஐந்து முதல் 11 வயது வரையிலான குழந்தைகளுக்கு பைஸர் மற்றும் பயோஎன்டெக் தடுப்பூசியைப் பெறுவதற்கான ஆரம்ப திகதி சில நாள்களில் நிர்ணயிக்கப்படும் என்று அமைச்சகம் தெரிவித்துள்ளது.

காலைக்கதிர் Kalaikkathir மாலைப்பதிப்பு



# ஆட்சிமொழிகளுள் ஒன்றாக தமிழ்மொழியை அறிவிக்க வேண்டுமென ஸ்டாலின் வலியுறுத்து




நாட்டின் ஆட்சிமொழிகளுள் ஒன்றாக தமிழ் மொழியை அறிவிக்க வேண்டுமென இந்திய மத்திய அரசை தமிழ்நாட்டு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் வலியுறுத்தியுள்ளார்.

திருப்பதியில் உள்துறை அமைச்சர் அமித்ஷாதலைமையில்நடந்ததென்மண்டலசபைக் கூட்டத்தில் தமிழக முதலமைச்சர் ஸ்டாலினின் உரையை அமைச்சர் பொன்முடி வாசித்தார். அதில், மழையால் பாதிக்கப்பட்ட மக்களை சந்திக்க வேண்டியிருந்ததால் கூட்டத்தில் பங்கேற்க இயலவில்லை என முதலமைச்சர் தெரிவித்துள்ளார். உலகின் மிகவும் பழைமையான மொழிகளுள் ஒன்றான தமிழ், இலங்கை, சிங்கப்பூர் ஆகிய நாடுகளில் தேசிய மொழியாக இருப்பதைச் சுட்டிக் காட்டியுள்ள முதலமைச்சர் ஸ்டாலின், தமிழ்மொழியை இந்தியாவின் ஆட்சி மொழிகளுள் ஒன்றாக அறிவிக்க வேண்டும்எனவலியுறுத்தியுள்ளார். மேலும், திருக்குறளைத் தேசிய நூலாக அறிவிக்க வேண்டும் எனவும் கேட்டுகொண்டுள்ளார்.

ரயில் சேவைகள் துறைக்குச் சொந்தமான நிலங்களை மெட்ரோ ரயில் திட்டத்திற்காக வழங்கும்போது அந்த நிலத்தின் முழு உரிமையையும் எந்த நிபந்தனையுமின்றி வழங்கவேண் டும் என முதலமைச்சர் ஸ்டாலின் கோரிக்கை விடுத்துள்ளார். தமிழ்நாட்டின் மின்னுற்பத்தித் திட்டங்கள் பலவற்றுக்கு ஒன்றிய அரசு இன்னும் அனுமதி வழங்கவில்லை என்பதை அவர் சுட்டிக் காட்டியுள்ளார். சமூகப் பாதுகாப்புத் திட்டங்களை செயல்படுத்துவதன் மூலம் தமிழ்நாடு முன்மாதிரி மாநிலமாக திகழ்வதாகப் பெருமிதம் தெரிவித்துள்ள தமிழக முதலமைச்சர் ஸ்டாலின், அத்தகைய திட்டங்களையும் பட்டியலிட்டுள்ளார். அதேநேரத்தில் மாநிலங்களுக்கு இடையேயான தேவையற்ற வழக்குகள், பகைமை உணர்வு ஆகியவற்றால் வளர்ச்சி பாதிக்கப்படும் என சுட்டிக்காட்டியுள்ள அவர், இத்தகைய பிரச்சினைகளுக்கு ‘அன்பெனும் பொது மொழி கொண்டு தீர்வு கண்டு முன்னேற்றப் பாதையில் நடைபோடுவோம்’ எனவும் தெரிவித்துள்ளார்.

## எருமை மாடு பால் கறக்க மறுக்கிறது பொலிஸில் விவசாயி விநோதப் புகார்



தான் வளர்க்கும் எருமை மாடு, தன்னைப் பால் கறக்க அனுமதிக்க மறுப்பதாக பொலிஸில் புகார் செய்த கிராமவாசியால் அந்தப் பகுதியில் பரபரப்பு ஏற்பட்டது.

இந்தியாவின் மத்தியப்பிரதேச மாநிலம் நயாகாவ் கிராமத்தைச் சேர்ந்த பாபுலால் என்ற விவசாயியின் வீட்டில் வளர்த்து வரும் எருமை மாடு ஒன்று, கடந்த சில நாள்களாகப் பால் கறக்க பாபுலாலை அனுமதிக்காமல் முரண்டு பிடித்துவந்ததாகக் கூறப்படுகிறது. இதனால் மாட்டுக்கு யாரோ பில்லி சூனியம் வைத்திருக்கின்றனர் எனக் கருதிய பாபுலால், எருமை மாட்டை அழைத்துக் கொண்டு பொலிஸ் நிலையத்துக்கு வந்து புகார் அளித்திருக்கிறார். பாபுலாலின் புகாரைக் கேட்டு தடுமாறிய பொலிஸார், மாட்டைக் கால்நடை மருத்துவமனைக்கு அழைத்துச் செல்லுமாறு அவருக்கு அறிவுரை கூறி அனுப்பிவைத்தனர்.

ஆனால், எதேச்சையான நிகழ்வாக அதன் பின்னர், அந்த எருமை மாடு பால் கொடுக்க ஆரம்பித்திருக்கிறது. இதனால் மகிழ்ச்சியடைந்த பாபுலால், பொலிஸ் நிலையத்துக்கு வந்து மாடு பால் கொடுக்க ஆரம்பித்துவிட்டதாக நன்றி தெரிவித்தார். இந்த விநோத சம்பவம் அப்பகுதி மக்களிடையே பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது.



## வாகனப் போக்குவரத்திற்கு ஏன் தடைவிதிக்கக் கூடாது காற்று மாசு பற்றி டெல்லி அரசிடம் உச்சநீதிமன்றம் கேள்வி

டெல்லியில் காற்று மாசுபாட்டைக் குறைப்பதற்காக மூன்று நாள்களுக்கு வாகனப் போக்குவரத்திற்கு ஏன் தடைவிதிக்கக் கூடாது? என உச்ச நீதிமன்றம் கேள்வி எழுப்பியிருக்கிறது.

இந்தியத் தலைநகர் டெல்லியில் காற்று மாசுபாடு குறித்த வழக்கு நேற்று விசாரணைக்கு வந்தபோது. காற்று மாசுப் பிரச்சினைக்கு நிரந்தரத் தீர்வு தேவைப்படுகிறது என உச்சநீதிமன்றம் தெரிவித்தது. அப்போது டெல்லி அரசு, டெல்லியில் முழு முடக்கத்தை அமுல்படுத்தவும் தயாராக இருக்கிறோம், என உச்ச நீதிமன்றத்தில் பதிலளித்தது. மேலும், வாகன நிறுத்தக் கட்டணங்களை நான்கு மடங்குவரை உயர்த்தலாம் என்றும், மெட்ரோ ரயில் சேவை எண்ணிக்கையை அதிகரிக்கலாம் என்றும் மாற்றுத் திட்டங்கள் பற்றியும் தெரிவித்தது. திறந்தவெளியில் கழிவுகளை எரிப்பதைத் தடுத்து நிறுத்தலாம் உள்ளிட்ட யோசனைகளையும் டெல்லி அரசு முன்வைத்தது.

டெல்லியின் நிலை மோசமான நிலையில் இருப்பதால் இப்போது புதிய பரிசோதனை முயற்சிகளை மேற்கொள்ள இயலாது எனவும், உடனடியாகப்பலன்அளிக்கக்கூடியவிடயங்களை முன்வைக்க வேண்டும் என்றும் டெல்லி அரசுக்கு நீதிபதிகள் அறிவுறுத்தினர். அதனைத் தொடர்ந்து பயிர்க்கழிவுகள் எரிக்கப்படுவதால் டெல்லியில் காற்றின் தரம் மாசுபடுவது பத்து சதவீதம்தான் எனவும், கிட்டத்தட்ட எழுபது சதவீதமான மாசுக்கள் வாகனங்கள் மற்றும் தூசுக்களால்தான் ஏற்படுவதாகவும் தனது தரப்புத் தகவலாக இந்திய மத்திய அரசு குறிப்பிட்டது.

தலைநகர் டெல்லிக்குள் கனரக வாகனங்கள் நுழைவதைத் தற்காலிகமாகத் தடுக்கலாம் என்றும், ஒற்றைப்படை மற்றும் இரட்டைப்படை இலக்க எண்களைக் கொண்ட வாகனங்களை குறித்ததினங்களில்மட்டும்தான்இயக்கவேண்டும் என்ற பழைய திட்டத்தை மீண்டும் அமுல்படுத்தலாம் என்றும், செங்கல்சூளை உள்ளிட்டவை இயங்க இடைக்காலத் தடைவிதிக்கலாம் என்றும், பொதுமுடக்கத்தை தீவிரப்படுத்தலாம் என்றும் டெல்லி அரசு சார்பில் தெரிவிக்கப்பட்டது.

இந்தக் கருத்துக்களைக் கேட்டுக்கொண்ட உச்சநீதிமன்ற நீதிபதிகள், தொழிற்சாலைகள் மற்றும் வாகனங்களால் எழுபத்தைந்து வீதமான காற்று மாசு ஏற்படும் நிலையில் ஏன் உடனடியாக நடவடிக்கை எடுக்கவில்லை? எனக் கேள்வி எழுப்பினர். மேலும், டெல்லியில் ஒருவாரத்திற்கு பொதுமுடக்கத்தை அமுல்படுத்தலாமெனவும் அறிவுரை கூறிய அவர்கள், காற்று மாசுபாட்டைக் குறைக்க 3 நாள்களுக்கு வாகனப் போக்குவரத்திற்கு ஏன் தடைவிதிக்கக் கூடாது? எனவும் கேள்வியெழுப்பியுள்ளனர்.

## உத்தரப் பிரதேச அனைத்துத் தொகுதிகளிலும் காங்கிரஸ் போட்டியிடுமாம்

### பிரியங்கா தெரிவிப்பு

உத்தரப்பிரதேச மாநிலத்தில் அடுத்த ஆண்டு ஆரம்பத்தில் சட்டசபைக்கான தேர்தல் நடக்கவுள்ள நிலையில், அங்கே பா.ஜ.கவிடம் இருந்து ஆட்சியைக் கைப்பற்ற காங்கிரஸ் கட்சி தீவிரமாகச் செயற்பட்டுவருகிறது.

காங்கிரஸின் அந்த மாநிலப் பொறுப்பாளரும், கட்சியின் பொதுச்செயலாளருமான பிரியங்கா காந்தி அங்கு தங்கியிருந்து தேர்தல் ஏற்பாடுகளைக் கவனித்து வருகிறார். அவர் அங்கு அனுப்ஷாகர் என்ற இடத்தில் நேற்று மக்களைச் சந்தித்து உரையாற்றிய போது, ‘உத்தரப்பிரதேச மாநிலத்தில் உள்ள 403 சட்டசபைத் தொகுதிகளிலும் காங்கிரஸ் போட்டியிடும். அதற்குக் கட்சி தயாராகி இருக்கிறது. 40 சதவீத இடங்கள் பெண்களுக்கு அளிக்கப்படும். பா.ஜ.கவுக்கு எதிராக காங்கிரஸ் கட்சிதான் களத்தில் போராடுகிறது. சமாஜ்வாடியோ, பகுஜன் சமாஜ் கட்சியோ அல்ல’ என்று தெரிவித்திருக்கிறார்.





# வரவு – செலவுத் திட்டத்தை தோற்கடிக்காதீர்கள் கிழக்கு மாகாண ஆளுநர் வலியுறுத்தியுள்ளார்

தேவைகளை பூர்த்தி செய்ய வரவு செலவு திட்டத்தை தோற்கடிக்காதீர்கள் என திரு கோணமலை மாவட்ட உள்ளூராட்சி மன்ற உறுப்பினர்களிடம் கிழக்கு மாகாண ஆளுநர் அநுராதா யஹம்பத் வலியுறுத்தியுள்ளார். தனிப்பட்ட மனக்குறைபாடுகள் காரணமாக உள்ளூராட்சி வரவு செலவுத் திட்டத்தை தோற் கடிக்க வேண்டாம் திருகோணமலையிலுள்ள கோமரன்கடவல, பதவிஸ்ரீபுர, மொரவெவ ஆகிய பிரதேச சபைகளின் தவிசாளர்களுட னும் அரசாங்க உறுப்பினர்களுடனும் நேற்று திருகோணமலையில் உள்ள ஆளுநர் செயல கத்தில் இடம்பெற்ற விசேட சந்திப்பின் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அங்கு தொடர்ந்து உரையாற்றிய ஆளுநர், வரவு செலவுத் திட்டத்தை தோற்கடித்ததன் பின்னர் தலைவர்களுடன் தனிப்பட்ட குறை களை தீர்த்துக்கொள்ள முற்பட்டால், அதற்கு தயாராக இருக்க வேண்டாம்.

இந்த நாட்டை சுபீட்சமான நாடாக மாற்று வதற்கு ஜனாதிபதி பெரும் அர்ப்பணிப்புடன் செயற்பட்டு வருகின்றார். அதற்கு நாம் அனை வரும் ஆதரவளிக்க வேண்டும். சபைகளின் வரவு செலவுத் திட்டங்கள் தோற் கடிக்கப்பட்டு அந்த சபைகள் நிலையற்றதாக மாறினால் அரசாங்கத்தின் அபிவிருத்தி வேலைத்திட்டம் பின்னோக்கிச் செல்லும்.

அபிவிருத்திப் பணிகளுக்காக தயாரிக்கப் பட்ட வரவு செலவுத் திட்டத்திற்கு அரசாங்க உறுப்பினாகள் என்ற வகையில் ஆதரவு தாருங்கள். மேலும் பிரதேச சபைக்கு வரு மானம் ஈட்ட நல்ல வழி உள்ளது.

இயற்கை உரத்தை உற்பத்தி செய்து விற்பனை செய்து வருமானம் ஈட்டவும். தேவை யான ஆதரவை நாங்கள் வழங்கு வோம், என்று அவர் மேலும் கூறினார். இதன்போது கோமரன்கடவல, பதவி ஸ்ரீ புர மற்றும் மொர வெவ பிரதேச சபைகளின் தவிசாளர்கள் உட்பட அனைத்து அரச உத்தியோகத்தர்களும் கலந்துகொண்டனர்.

# எய்ம்ஸ் சர்வதேச ஆங்கில பாடசாலை அக்கரைப்பற்று மேயரினால் திறப்பு

அக்கரைப்பற்று எய்ம்ஸ் சர்வ தேச ஆங்கில பாடசாலை அக்கரைப் பற்று மாநகர முதல்வர் அதா உல் லா அகமட் சகியினால் நேற்று ஆரம்பித்து வைக்கப்பட்டது. பாட சாலையின் பணிப்பாளர் சபை உறுப்பினர்களின் தலைமை யில் இடம்பெற்ற இந்த நிகழ்வின் போது அக்கரைப் பற்று பிரதேசசபை தவி சாளர் எம்.ஏ. ராசீக், அக்கரைப் பற்று பிரதேச செயலாளர் ரீ.எம்.எம். அன் சார் அக்கரைப்பற்று, வலயக் கல்வி பணிப்பாளர் ஏ.எம்.ரஹ்மத் துல் லாஹ் மற்றும் பிரதேச முக்கியஸ்தர் கள்,சிரேஷ்ட கல்விமான்கள், உல மாக்கள், புத்திஜீவிகள், பெற் றோர் நலன் விரும்பிகள் உட்பட பலர் கலந்து கொண்டனர். அக்கரைப் பற்று எனும் துறைசார் ஆளுமைகள் நிறைந்து காணப்படும் உன்னதமண் ணில் சர்வதேச தரத்திற்கு இணை யான கல்வியை வழங்கும் நோக்கில் ஆரம்பிக்கப்பட்டுள்ள 'எய்ம்ஸ்' எனும் கல்விக்கூடத்திற்கு இப்பிராந்திய ம க்கள் அனைவரதும் ஆசிர்வாதங் களும் நிறைவானதாக அமையும் என அக்கரைப்பற்று மாநகர பிதா அதா உல்லா அகமட்ஸகி உரையாற் றும் போது தெரிவித்தார். மேலும் பெயருக்கு ஏற்றாற் போல எய்ம்ஸ் அழகான கல்விச் சூழலை உரு வாக்குவதுடன், சவால் மிக்க கல்வி பாதையில் உன்னத மாணவப் பெறுமானங்கள் ஊடாக அதி சிறந்த எதிர்கால அடைவுகளையும், அறு வடைகளையும் பெற்றுக் கொள்ள வேண்டுமெனவும் இதன் போது முதல்வர் வலியு றுத்தினார்.

இந்த நிகழ்வின் போது,வல யக் கல்விப் பணிப்பாளர் மற்றும் அக் கரைப்பற்று மாநகர முதல்வர் ஆகி யோரின் கல்விக்காய் கரம் கொடுக் கும் கனதியான சேவை மனப்பாங் கினை பாராட்டி விழா ஏற் பாட்டுக் குழு வினரால் நினைவுச் சின்னங்களும் வழங்கி கௌரவிக்கப்பட்டமை குறிப் பிடத்தக்கது.




# மட்டக்களப்பு மாநகரசபைக்கு நியூசிலாந்து தூதுவர் விஜயம்

மட்டக்களப்பு மாநகரசபைக்கு இலங்கைக்கான நியூசிலாந்து தூதுவர் மைக்லே அப்ளிடன், உதவி தூதுவர் அன்ரூவ் ரவ்ளர் ஆகியோர் நேற்று விஜயம் செய்தனர். இதன் போது பலதரப்பட்ட விடயங்கள் கலந்துரையாடப்பட்டன.

தற்போது அதிகரித்து செல்லும் பொருள்களின் விலை யேற்றத்தால் மட்டக்களப்பு மக்கள் எதிர்நோக்கும் சவால்கள், இக் காலகட்டத்தில் ஏற்பட்டுள்ள அரசியல், பொருளாதார மற்றும் சமூகப் பிரச்சினைகள் பற்றி கலந்தாலோசிக்கப்பட்டமையுடன் அரசுடன் இணைந் துள்ள மட்டக்களப்பு அரசியல்வாதிகள் இருவரின் அரசியல் செயற்பாடுகள், மக்கள் மத்தியில் அவை உண்டுபண் ணியுள்ள அதிர்வலைகள் போன்ற விடயங்களும் கலந்துரையாடப்பட்டன.

அத்தோடு மட்டக்களப்பு மாநகர அபிவிருத்தியில் சிறுவர் சிநேக மாநகர திட்டங்கள், யுனிசெப் நிறு வனத்துடன் இணைந்து மேற்கொண்டுவரும் வேலைத் திட்டங்கள் குறித்த விடயங்களும் கலந்துரையாடப்பட் டன.

அத்துடன் இங்குள்ள கிராமங்களின் அபிவிருத்தி யின் பொருட்டு கொக்குவில், சத்துருக்கொண்டான், ஊறணி போன்ற கிராமப்புறங்களில் பாரியளவான சிறுவர் பூங்காக்கள் அமைத்துத்தர வேண்டும் என மட்டக்களப்பு மாநகரசபை முதல்வர் தியாகராஜா சரவணபவன் அவர்களினால் தூதுவர்களிடம் முன் மொழிவு (proposal) ஒன்று முன்வைக்கப்பட்டுள்ளது.



# கிழக்கில் நீதிபதியாக ஒரேயொரு தமிழ் பெண்மணி தெரிவு

கிழக்கு மாகாண–அம்பாறை மாவட்டத்தில் இம் முறை நீதிபதியாக ஒரேயொரு தமிழ் இளம் பெண்மணி தெரிவு செய்யப்பட்டுள்ளார். நேற்று அவர் திங்கட்கிழமை நீதிபதியாக சத்தியப்பிரமாணம் எடுத்துள்ளார்.

நீதிபதிகளுக்கான பதவி நியமன திறந்த போட்டிப் பரீட்சையில் சித்தி பெற்று நேர்முகப் பரீட்சையிலும் தெரிவு செய்யப்பட்டு ஜெகநாதன் சுபராஜினி மிக இள வயதில் நீதிபதியாகின்றார்.

அம்பாறை திருக்கோவில் பிரதேசத்திலிருந்து தெரிவான முதலாவது பெண்நீதிபதி ஜெகநாதன் சுபராஜினி என்பதும் குறிப்பிடத்தக்கது.

மேலும், இவர் திருக்கோவில் மெதடிஸ்த தமிழ் மகாவித்தியாலயத்தில் க.பொ.த. (சா/தர) வரை கற்று 9 பாடங்களிலும் A சித்தி பெற்று, உயர்தரத்தில் கலைப்பிரிவை தெரிவு செய்தமை குறிப்பிடத்தக்கது

அவ்வகையில் க.பொ.த. (சாதாரண தரப்) பரீட்சையில் அனைத்து பாடங்களிலும் அதிதிறமை சித்திகள் பெற்று முதலிடம் க.பொ.த (உயர் தரப்) பரீட்சையில் மூன்று அதிசிறந்த சித்திகள் பெற்று அம்பாறை மாவட்டத்தில் முதலிடம் பெற்றமை பின் பல்கலைக்கழகத்தில் சட்ட இளமாணி பட்டத்திலும் உயர்வு சித்தி பெற்றமை மற்றும் தற்போது முதற் தடவையாக நீதிபதிப் பரீட்சைக்கு தோற்றி கிழக்கு மாகாணத்தில் சிறுவயதில் நீதிபதியாக தெரிவு செய்யப்பட்ட முதற் பெண்மணி என்ற பெருமையின் மகுடமும் திருமதி. ஜெகநாதன் சுபராஜினியே சாரும்.

ஓர் சாதனையை அடைவதற்கு சிறந்த வழிகாட்டி சிறந்த ஆசான் அவசியமாகும். அதனடிப்படையில் திருமதி ஜெகநாதன் சுபராஜினி இச்சாதனையை சுவைப்பதற்கு வழிகாட்டியாகவும் ஆசானாகவும் மட்டுமன்றி உற்ற துணையாகவும் அவரது கணவர் சிரேஷ்ட சட்டத்தரணி சொலிசிற்றர் மற்றும் பரிஸ்டர் சிந்தாத்துரை ஜெகநாதன் அமைந்தமை ஒரு வரப்பிரசாதமாகும்.

இவ்விதம் தெரிவான நீதிபதி சுபராஜினியை பாராட்டி சமுகவலைத்தளங்களில் பரந்தளவில் பாராட்டுத்தெரிவிக்கப்பட்டுவருகிறது.

# தெற்காசிய கூடைப்பந்து சம்மேள சம்பியன்ஷிப் முதல் போட்டியில் இலங்கையணிக்கு வெற்றி

தெற்காசிய கூடைப்பந்து சம்மேள சம்பியன்ஷிப் தொடர் நேற்று பங்களாதேஷில் ஆரம்பமானது. இலங்கை, இந்தியா, பங்களாதேஷ், மாலைதீவுகள் அணிகள் இந்தத் தொடரில் பங்குபற்றுகின்றன. நேற்று நடைபெற்ற முதலாவது போட்டியில் நடப்புச் சம்பியனான இலங்கை அணி 67-56 என்ற புள்ளிகளடிப்படையில் பங்களாதேஷ் அணியை வெற்றிபெற்றது.

இந்தத் தொடரில் விளையாடுகின்ற நடப்புச் சம்பியனான இலங்கையணி கடந்த ஒருமாத காலமாக உயிரியல் பாதுகாப்பு வளையத்தினுள் பயிற்சிகளை மேற்கொண்டு வந்திருந்தமை குறிப்பிடத்தக்கது.

இந்தத் தொடர் குறித்து கருத்துத் தெரிவித்த இலங்கைக் கூடைப்பந்தாட்ட சம்மேளனத்தில் செயலாளர் சந்ரசேன லியனகே, நாம் இலங்கையில் கூடைப்பந்தாட்டத்தை பெரிய முக்கியத்துவத்துடன் பார்க்கவில்லை. ஆனால், கூடைப்பந்தாட்டத்தை அடுத்த மட்டத்துக்குக் கொண்டு சென்றுள்ளோம். நாம் புதிய நோக்குடன் முன்நகர்வதோடு, சர்வதேச கூடைப்பந்தாட்ட சம்மேளனத்தின் ஆசிய தகுதிகாண் தொடரை எட்டும் நோக்குடன் எமது பயணத்தைத் தொடங்கியுள்ளோம், என்று குறிப்பிட்டுள்ளார்.

இலங்கை கூடைப்பந்தாட்ட சம்மேளனம் தெரிவுசெய்துள்ள குழாமில், மேலதிக வீரர்களில் ஒருவராக யாழ். ஏஞ்சல் சர்வதேசப் பாடசாலையின் யோகனமதன் ஷிம்ரொன் இணைக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

இலங்கைக் கூடைப்பந்தாட்ட அணி விவரம் -

கிளிண்டன் ஸ்டெல்லோன் (தலைவர்), ருக்ஷான் அதபத்து (உப தலைவர்), கயான் டி குரூஸ், திமோதி நிதுன், பிரனீத் உடுமலகல, சானுக பெர்னாண்டோ, அர்னோல்ட் பிரெண்ட், உதயங்கர பெரேரா, தசுன் நிலந்த மெண்டிஸ், பவன் கமகே, நிமேஷ் பெர்னாண்டோ, அசங்க மஹேஸ் ராஜகருண

மேலதிக வீரர்கள் - சசிந்து கஜநாயக்க, யோகனமதன் ஷிம்ரொன், செரான் பெர்னாண்டோ.





## இந்திய அணியுடனான ரி-20 தொடரிலிருந்து நியூசிலாந்தின் கேன் வில்லியம்சன் விலகல்

நாளை ஆரம்பமாவுள்ள இந்திய அணிக்கு எதிரான ரி-20 கிரிக்கெட் தொடரிலிருந்து நியூசிலாந்து அணியின் தலைவர் கேன் வில்லியம்சன் விலகியுள்ளார் .

இந்தியாவுக்கு சென்றுள்ள நியூசிலாந்து அணி, மூன்று ரி-20 போட்டிகள், 2 டெஸ்ட் போட்டிகள் கொண்ட தொடர்களில் விளையாடவுள்ளது. இந்தத்தொடரில் பங்கேற்பதற்காக நியூசிலாந்து அணி நேற்று இந்தியா வருகை தந்தது. முதல் போட்டி ஜெய்ப்பூரில் உள்ள சவாய் மான்சிங் மைதானத்தில் நாளை நடைபெறவுள்ளது.

இந்தநிலையில் இந்திய அணிக்கு எதிரான ரி-20 தொடரில் நியூசிலாந்து அணியின் தலைவர் கேன் வில்லியம்சன் விளையாடமாட்டார் என அறிவிக்கப்பட்டுள்ளது. கான்பூரில் நவம்பர் 25 ஆம் திகதி ஆரம்பமாகவுள்ள டெஸ்ட் தொடருக்குத் தயாராகும் வகையில், ரி-20 தொடரிலிருந்து கேன் வில்லியம்சன் விலகியிருக்கிறார் என்று செய்திகள் தெரிவிக்கின்றன. இதனையடுத்து, ரி-20 போட்டிகளில் விளையாடும் நியூசிலாந்து அணிக்கு டிம் சவுத்தி தலைவராகச் செயல்படுவார் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

ரி-20 அணித்தலைவர் பதவியிலிருந்துவிராட்கோலிவிலகியிருக்கும் நிலையில், ரோகித் சர்மா இந்திய அணிக்குத் தலைமைதாங்கவுள்ளமை குறிப்பிடத்தக்கது.

## 2022 ரி—20 உலகக்கிண்ணக் கிரிக்கெட் தொடர் ஆஸ்திரேலியாவின் ஏழு நகரங்களில் நடைபெறும்

2022 ஆம் ஆண்டுக்கான ரி-20 உலகக் கிண்ணக்கிரிக்கெட்தொடர், ஆஸ்திரேலியாவின் ஏழு நகரங்களில் நடைபெறும் என சர்வதேச கிரிக்கெட் சபை (ஐ.சி.சி.) உறுதி செய்துள்ளது.

இந்தப் போட்டிகள் அடுத்தவருடம் ஒக்ரோபர் 16ஆம் திகதி தொடங்கி, இறுதிப் போட்டி நவம்பர் 13ஆம் திகதி மெல்போர்ன் கிரிக்கெட் மைதானத்தில் நடைபெறும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது. அடிலெய்ட், பிரிஸ்பேன், மெல்போர்ன், சிட்னி உள்ளிட்ட ஏழு இடங்களில் மொத்தம் 45 போட்டிகள் நடைபெறவுள்ளன. முதல் அரையிறுதி நவம்பர் 9ஆம் திகதி சிட்னி கிரிக்கெட் மைதானத்திலும், இரண்டாவது அரையிறுதி நவம்பர் 10ஆம் திகதி அடிலெய்ட் ஓவல் மைதானத்திலும் நடைபெறவுள்ளது.

தொடரின் சுப்பர்-12 சுற்றில் நேரடியாக விளையாடுவதற்கு நடப்பு சம்பியன் ஆஸ்திரேலியா, நியூசிலாந்து, இந்தியா, ஆப்கானிஸ்தான், பங்களாதேஷ், பாகிஸ்தான், இங்கிலாந்து மற்றும் தென்னாபிரிக்க அணிகள் தகுதிபெற்றுள்ளன. முதல் சுற்றான தகுதிகாண் குழுவில் நமீபியா, ஸ்கொட்லாந்து, இரண்டு முறை சம்பியனான மேற்கிந்தியத் தீவுகள் மற்றும் 2014 சம்பியனான இலங்கை அணிகள் விளையாடவுள்ளன. இதில் நான்கு அணிகள் தகுதிச் சுற்று மூலம் சுப்பர்-12 சுற்றுக்குத் தகுதி பெறும்.

கடந்த ஆண்டு ஆஸ்திரேலியாவில் நடத்தப்படவிருந்த இந்த ரி-20 உலகக் கிண்ணக் கிரிக்கெட் தொடர், கொரோனாப் பரவல் தீவிரமாகவிருந்த காரணத்தினால் நடத்துவதற்குச் சாத்தியமில்லாமற்போனதால், 2022ஆம்ஆண்டில்தொடரைநடத்துவதற்கான சந்தர்ப்பம் ஆஸ்திரேலியாவுக்கு வழங்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது.



## ஜப்னா கிங்ஸ் அணியின் பயிற்சியாளர்கள் விவரத்தை அணி நிர்வாகம் வெளியிட்டது

லங்கா பிறீமியர் லீக் ரி-20 கிரிக்கெட் தொடருக்கான (எல்.பி.எல்.) ஜப்னா கிங்ஸ் அணியின் பயிற்சியாளர்கள் குறித்த அறிவிப்பினை அணி நிர்வாகம் வெளியிட்டிருக்கின்றது.

அதன்படி இரண்டாவது பருவகாலத்திற்கான எல்.பி.எல். தொடரில் ஜப்னா கிங்ஸ் அணியின் தலைமைப் பயிற்சியாளராக திலின கண்டம்பி செயற்படவிருக்கின்றார். திலின கண்டம்பியின் பயிற்சியின்கீழ் கடந்த எல்.பி.எல். தொடரில் ஜப்னா ஸ்டாலியன்ஸ் என்ற பெயரில் விளையாடியிருந்த ஜப்னா கிங்ஸ் அணி, சம்பியனாகியிருந்தது.



அணியின் உதவிப் பயிற்சியாளராகவும் வேகப்பந்துவீச்சுப் பயிற்சியாளராகவும் இலங்கை கிரிக்கெட் ஏ அணி, இலங்கை அபிவிருத்திக் கிரிக்கெட் அணி ஆகியவற்றுக்கு பயிற்சியளித்தவரும், ஐ.பி.எல்.தொடரில் சன் ரைஸர்ஸ் ஹைதரபாத் அணியின் பயிற்சியாளர் குழுவில் இடம்பெற்றவருமான அனுபவமிக்க மரியோ வில்லவராயன் நியமிக்கப்பட்டுள்ளார்.

ஜப்னா கிங்ஸ் அணியின் துடுப்பாட்டப் பயிற்சியாளராக இலங்கைத் தேசிய கிரிக்கெட் அணியின் முன்னாள் வீரரான ஜெஹான் முபாரக் நியமனம் செய்யப்பட்டிருக்கின்றார். இவர் தற்போது கொழும்பு றோயல் கல்லூரி அணியின் பயிற்றுவிப்பாளராக செயற்பட்டுவருகின்றார்என்பதுகுறிப்பிடத்தக்கது.

ஜப்னா கிங்ஸ் அணியின் சுழல்பந்து வீச்சுக்கான சிறப்புப் பயிற்சியாளராக இலங்கை கிரிக்கெட் அணியின் முன்னாள் வீரர்களில் ஒருவரான சசித் பத்திரனவும், களத்தடுப்புப் பயிற்சியாளராக விமுக்தி தேசப்பிரியவும் இணைத்துக் கொள்ளப்பட்டுள்ளனர்.

# வெள்ளம் பாதித்தோருக்கு தமிழரசுக் கட்சியால் உதவி





பச்சிலைப்பள்ளி பிரதேசத்தில் தொடர்ச்சியாக பெய்து வந்த கனமழை காரணமாக ஏற்பட்ட வெள்ளத்தில் பாதிக்கப்பட்டோருக்கு கடந்த ஞாயிற்றுக்கிழமை தமிழரசுக் கட்சியின் கிளிநொச்சி மாவட்ட கிளையினரால் அத்தியாவசியப் பொருள்கள் வழங்கி வைக்கப்பட்டன.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் சிவஞானம் சிறிதரனின் ஆலோசனைக்கு அமைய வடக்கு மாகாண முன்னாள் கல்வி அமைச்சர் குருகுலராஜாவின் ஏற்பாட்டில் இந்த உதவிகள் வழங்கப்பட்டன.

உதவி வழங்கி வைக்கும் நிகழ்வில் வடக்கு மாகாண முன்னாள் கல்வி அமைச்சர் குருகுலராஜாவுடன் பச்சிலைப்பள்ளி பிரதேச சபையின் தவிசாளர் சு.சுரேன், உபதவிசாளர் மு.கயன், பிரதேச சபையின் உறுப்பினர்கள் ரமேஸ், வீரவாகுதேவர் மற்றும் வட்டார அமைப்பாளர்களும் கலந்து கொண்டனர்.

# வழங்கிய வாக்குறுதிகள் மீறப்பட்டமையே அரசுக்குள்ளிருந்து விமர்சிக்கக் காரணம்

## உதய கம்மன்பில விளக்கம்



வழங்கப்பட்ட வாக்குறுதிகள் மீறப்பட்டு வருகின்ற காரணத்தாலேயே அரசாங்கத்துக்குள் இருந்துகொண்டு விமர்சிக்கிறோம் என அமைச்சர் உதய கம்மன்பில தெரிவிக்கின்றார். இது அரசாங்கத்தில் முரண்பாடுகளை ஏற்படுத்தும் விதமாக தெரிந்தாலும் அதனை தாம் நியாயமாகக் கருதுகிறோம் எனவும் அவர் குறிப்பிட்டார்.

ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவிற்கும் பங்காளிக் கட்சிகளுக்கும் இடையிலான முரண்பாடுகள் மற்றும் கருத்து வேறுபாடுகள் தொடர்பாகக் கருத்து தெரிவிக்கும் போதே அவர் இதனைக் கூறினார். தேர்தல் மேடைகளில் தெரிவித்தமைக்கு இணங்கவே தாம் செயற்பட்டு வருகிறோம் எனவும் அமைச்சர் உதய கம்மன்பில கூறினார்.

இருப்பினும் அரசாங்கத்தின் தற்போதைய பயணம் பல முரண்பாடுகளை ஏற்படுத்தியுள்ளது என்றும் பொது வேலைத்திட்டங்கள் தொடர்பாகத் தீர்மானம் எடுக்கும் வேளையில் தவறான தீர்மானங்கள் எடுக்கப்படுகின்றன எனவும் சுட்டிக்காட்டினார்.

குறிப்பாக யுகதனவி ஒப்பந்தம், திருகோணமலை ஒப்பந்தம் போன்றவற்றில் தமது முழுமையான எதிர்ப்பை வெளிப்படுத்தி வருகிறோம் எனவும், தமது நிலைப்பாட்டில் இருந்து ஒருபோதும் மாறவோ பின்வாங்கவோ போவதில்லை என்றும் உதய கம்மன்பில குறிப் பிட்டார்.

மேலும் 20 ஆம் திருத்தம் நிறைவேற்றப்பட்ட வேளையில், அமைச்சரவையில் மௌனம் காத்து, வாத விவாதம் நடத்தாது செய்த தவறை இனியும் செய்ய முடியாது என்றும் உதய கம்மன் பில தெரிவித்தார்.

# நீரிழிவு நோயாளர் யாழில் அதிகரிப்பு

யாழ்ப்பாண மாவட்டத்தில் நீரிழிவு தொற்றுக்குள்ளாகுவோரின் எண்ணிக்கை அதிகரித்து வருவதாக யாழ். போதனா வைத்தியசாலையின் நீரிழிவு சிகிச்சை நிலைய பொறுப்பு வைத்திய அதிகாரி ம.அரவிந்தன் தெரிவித்தார் .

நேற்று (திங்கட்கிழமை) யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலையில் நீரிழிவு சிகிச்சை முகாமை ஆரம்பித்து வைத்த பின் ஊடகங்களுக்கு கருத்து தெரிவிக்கும் போதே மேற்கண்டவாறு தெரிவித்தார்.

தொடர்ந்து கருத்து தெரிவித்த அவர் –

யாழ் மாவட்டத்தைப் பொறுத்தவரை தற்போது நீரிழிவு நோய் என்பது பெரும் ஓர் அச்சுறுத்தலாக மாறியுள்ளது. குறிப்பாக இளவயதைச் சேர்ந்தவர்களுக்கு இந்த நீரிழிவு நோய் அதிகமாக காணப்படுகின்றது.

இந்த நோய்த் தாக்கத்துக்குள்ளாகுபவர்களுக்கு எதிர்காலத்தில் பல பாதிப்புகள் ஏற்படக்கூடிய சாத்தியக்கூறுகள் உள்ளன. குறிப்பாக இந்த நீரிழிவு நோய்த் தொற்றுக்கு உள்ளாகுவோருக்கு ஏனைய பல தொற்றுநோய்களும் ஏற்படுவதற்கான சான்றுகள் உள்ளன. குறிப்பாக பாரிசவாதம் மற்றும் ஏனைய பல தொற்று நோய்கள் ஏற்படக்கூடிய சாத்தியக் கூறுகள் காணப்படுகின்றன. எனவே, இளவயதினர் குறித்த நீரிழிவு நோய் தொடர்பில் அவதானமாகச் செயற்பட வேண்டும்.

குறிப்பாக உடற்பயிற்சி மேற்கொள்ள வேண்டும். அல்லது தகுந்த வேளைகளில் நீரிழிவு பரிசோதனையை மேற்கொண்டு ஆரம்பத்தில் இந்த நீரிழிவு நோயை இனங் காணும் பட்சத்தில் அந்த நோயைக் குணமாக்க முடியும். அல்லது நோய் தொற்று காணப்பட்டால் அதனை முறையாகப் பின்பற்றி குணப்படுத்த முடியும்.

எனவே, யாழ்ப்பாண மாவட்டத்தில் நீரிழிவு நோய் தொடர்பில் பொது மக்கள் சற்று அவதானமாகச் செயற்பட வேண்டும் என அவர் தெரிவித்தார்.

உலக நீரிழிவு தினத்தை முன்னிட்டு யாழ்ப்பாண நீரிழிவு கழகம், யாழ் போதனா வைத்தியசாலையுடன் இணைந்து செயற்படுத்தும் நீரிழிவு சிகிச்சை முகாம் நேற்று காலை ஆரம்பித்து வைக்கப்பட்டது

யாழ் போதனா வைத்தியசாலையின் வெளி நோயாளர் பிரிவில் இடம்பெறும் நீரிழிவு சிகிச்சை முகாமை யாழ் போதனா வைத்திய சாலை பணிப்பாளர் த. சத்தியமூர்த்தி மற்றும் மற்றும் நீரிழிவு சிகிச்சை நிலைய வைத்தியர் மகாலிங்கம் அரவிந்தன் ஆகியோர் ஆரம்பித்து வைத்ததோடு யாழ் நீரிழிவு கழகத்தின் தலைவர் தி. மைக்கல், செயலாளர் க. கணபதி மற்றும் நீரிழிவு கழக உறுப்பினர்கள் கலந்து கொண்டு சிறப்பித் தனர். குறித்த நீரிழிவு சிகிச்சை முகாமில் பொதுமக்கள் நீரிழிவு பரிசோதனையை மேற்கொண்டமை குறிப் பிடத்தக்கது.

# வவுனியா நெடுங்கேணி பிரதேச செயலகத்துடன் அநுராதபுரத்திலுள்ள ஆயிரம் குடும்பம் இணைப்பு

## திட்டம் வகுக்கப்படுவதாக சிவசக்தி ஆனந்தன் குற்றச்சாட்டு



வவுனியா வடக்கு நெடுங்கேணியில் பிரதேச செயலகத்துடன் அநுராதபுரத்திலுள்ள மூன்று கிராம சேவையாளர் பிரிவிலுள்ள ஆயிரம் குடும்பங்களை இணைப்பதற்கு அரசாங்க அதிபர் முன்மொழிவு ஒன்றை எல்லை நிர்ணயக்குழுவிற்கு பரிந்துரைத்துள்ளார் என முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினரும் ஈழமக்கள் புரட்சிகர விடுதலைமுன்னணியின் செயலாளருமான சிவசக்தி ஆனந்தன் தெரிவித்துள்ளார். சிங்களக் குடியேற்றங்களிற்கெதிராக வவுனியா வடக்கில் நேற்று திங்கட்கிழமை இடம்பெற்ற ஆர்ப்பாட்டத்தில் கலந்துகொண்டுவிட்டு ஊடகங்களுக்குக் கருத்துத் தெரிவிக்கும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

தொடர்ந்து கருத்து தெரிவித்த அவர் –

'அரசாங்கம் இந்த மாவட்டத்தின் எல் லையின் ஓர் இஞ்சியைக் கூட்டுவதாக இருந்தாலும் சரி, குறைப்பதாக இருந்தாலும் சரி இந்த மாவட்டத்திலுள்ள மக்களின் கருத்துக்கள் மக்கள் பிரதிநிதிகளின் கருத்துக்கள் எதையும் அறியாமல் வவுனியா மாவட்ட அரசாங்க அதிபர் ஊடாக எல்லை நிர்ணயக்குழுவிற்கு அநுராதபுரத்திலுள்ள மூன்று கிராம சேவையாளர் பிரிவிற்குட்பட்ட ஆயிரத்திற்கும் மேற்பட்ட குடும்பங்களை நெடுங்கேணி பிரதேச செயலகத்துடன் இணைப்பதற்கான ஒரு முன்மொழிவு அரசாங்க அதிபரால் எல்லை நிர்ணயக்குழுவிற்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளது.

ஆகவே, இந்தத் திட்டமிடப்பட்டுள்ள சிங்களக் குடியேற்றத்தைத் தடுத்து நிறுத்தும்படி இந்தப் பிரதேசத்தில் இருக்கக் கூடிய அரசியல் கட்சிகள், சிவில் அமைப்புக்கள் ஒன்றிணைந்து அரசாங்கத்தின் கவனத்துக்குக் கொண்டு வரப்பட்டிருக்கின்றது' என்று மேலும் தெரிவித்துள்ளார் .

இந்நாளிதழ் யாழ்ப்பாணம் இல.30 இந்துக் கல்லூரி வீதியிலுள்ள Green Media House Pvt Ltd. நிறுவனத்தின் பணிமனையில் தயாராகி 16.11.2021இல் வெளியிடப்பெற்றது.